**செய்தி வெளியீடு எண்: 574** **நாள்: 12/11/2014**

கடந்த அக்டோபர் மாதம் தொடங்கிய வடகிழக்கு பருவமழையானது, திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தருமபுரி, நாகப்பட்டினம், மற்றும் உதகை ஆகிய 9 மாவட்டங்களில் வழக்கமாக பெய்யும் சராசரி அளவைவிட நாளதுவரையில், அதிகளவு மழை பெய்துள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 50% கூடுதலாக மழை பெய்துள்ளது.

மேலும், கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருவாரூர், சென்னை, சிவகங்கை, சேலம், கிருஷ்ணகிரி, கடலூர், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர், விழுப்புரம், தஞ்சாவூர், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய 16 மாவட்டங்களில் இயல்பான அளவு மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பணிகள் தற்போதைய நிலை குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் இன்று (12.11.2014) வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில், 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலர் / மாநில நிவாரண ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப., இணை ஆணையர் (பேரிடர் மேலாண்மை) திருமதி. ஆர். லில்லி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிவாரணப்பணிகளை விரைந்து மேற்கொள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், இப்பருவமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறிப்பாக, சாலைகளை செப்பனிடவும், குளம் குட்டைகள் மற்றும் குடிநீர் பணிகளை சீரமைத்திடவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட 60 கோடி ரூபாயானது, பின்வருமாறு துறைகளுக்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நெடுஞ்சாலைத்துறை | ரூ.30.00 கோடி |
| 2. | பொதுப்பணித்துறை | ரூ.10.00 கோடி |
| 3. | நகராட்சிகள் நிருவாகம் | ரூ. 10.00 கோடி |
| 4. | ஊரக வளர்ச்சித்துறை | ரூ. 10.00 கோடி |

மேலும், இப்பருவமழை காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கான நிதியுதவி, இறந்த கால்நடைகளுக்கான நிவாரண உதவி, முழுமையாகவும், பகுதியாகவும் சேதமடைந்த குடிசைகளுக்கான நிவாரண உதவி அனைத்தும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்பட்டு உள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இனி வருங்காலங்களில், இது போன்ற இயற்கை பேரிடர் காலங்களில், அரசின் பிற துறைகளை ஒருங்கிணைப்போடு எதிர்கொள்ள மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் இருந்திட வேண்டுமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

வருவாய்த்துறை செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9